உ

ஓம் கணபதி துணை

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

திரு / திருமதி / செல்வி .................................................

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 16.08.2020ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு எமது அலுவலகத்தில் தலைவர் Dr. ம. அருங்கரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்பொதுக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்.**

1. தேவாரம்.
2. தலைவர் உரை.
3. கடந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தலும், ஏற்றுக்கொள்ளலும்.
4. கடந்த வருட செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தலும், ஏற்றுக்கொள்ளலும்.
5. கடந்த வருட நிதியறிக்கை சமர்ப்பித்தலும், ஏற்றுக்கொள்ளலும்.
6. வேறு பொருத்தமான விடயங்கள்.
7. நன்றியுரை.
8. தேவாரம்.

நன்றி.

..............................
Dr. ம. அருங்கரன்.
தலைவர்.
03.08.2020.

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
அரன் நாமமே சூழ்க

..............................
திரு. ஜெ. ஜசிந்தன்.
கௌரவ செயலாளர்.
03.08.2020.

Scanned with CamScanner

உ
ஓம் கணபதி துணை

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

## செயற்பாட்டு அறிக்கை 01.04.2019 – 31.03.2020

### கூட்டங்கள்

23.06.2019ஆம் திகதி பொதுச்சபை கூட்டம் ஒன்றும், நான்கு நிர்வாகசபை கூட்டங்களும் நடைபெற்றன. பொதுச்சபைக்கூட்டத்திற்கு நல்லூர் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் திருமதி. நகுலா ருபேந்திரராசா அவர்களும், அரியாலை மத்தி தெந்கு கிராம சேவகர் பிரிவுக்குரிய. (J/96) கிராம சேவகர் திரு. ஜே. லினேஸ் அவர்களும் மற்றும் ஐம்பத்துஇரண்டு (52) பொதுமக்களும் பங்குபற்றியிருந்தனர்.

### அமைப்பு விதி (யாப்பு)

23.06.2019ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தில் அமைப்பு விதிகள் தொடர்பாக ஆராயப்பட்டு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பொதுச்சபையால் அங்கிகரிக்கப்பட்டது.

### பதிவுச்சான்றிதழ்

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஊடாக இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு மேற்கொள்ளப்பட்டு பதிவுச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட பெயர் | - அரியாலை இளைஞர் இந்து மாமன்றம். |
| பதிவு இலக்கம் | - HA / 4 / JA / 350 |
| பதிவு செய்யப்பட்ட திகதி | - 05.08.2019. |

### பொதுச்சபை உறுப்பினர்கள்

எமது மன்றத்தின் பொதுச்சபை உறுப்பினர்களாக இதுவரை முப்பத்துமூன்று (33) உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

### நிதியறிக்கை

01.04.2019ஆம் திகதி மன்றத்தின் ஆரம்ப மீதி கைப்பொறுப்பாக ரூபாய். 1,487.00 காணப்பட்டது. இவ் நிதியாண்டில் மொத்த வரவாக ரூபாய். 285,921.00 வரவு வைக்கப்பட்டு ரூபாய். 250,982.00 செலவு செய்யப்பட்டு 31.03.2020ல் கையிருப்பாக ரூபாய். 33,452.00 உள்ளது.

### மன்றத்தின் அலுவலகம்

எமது மன்றத்தின் அலுவலகம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை நேரத்தில் மக்கள் தொடர்புக்காக திறந்துவைக்கப்படுவதுண்டு. எமது அலுவலகத்திற்கு தேவையான மின்சார வசதி இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மற்றும் எமது அலுவலகத்திற்கு தேவையான தண்ணீர் வசதியானது திருமதி. ச. மகாலட்சுமி அவர்களின் இல்லத்திலிருந்து நேரடியாக நீர்க்குழாய் மூலம் பெறப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

**யோகா கலை**

எமது யோகா கலை பயிற்சி வகுப்புக்கள் கடந்த 20.04.2019ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டபோதும் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டமையால் மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. குறைந்தது 15 பயிற்சியாளர்களாவது பயிற்சி பெற தயாராக உள்ளபோது மீண்டும் வகுப்புகளை ஆரம்பிக்கலாம் என நிர்வாகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கோவில் திருவிழாக்கால நிகழ்ச்சிகள்**

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவ தேர்த்திருவிழாவின்போது சிறுப்பிட்டி சத்தியதாஸ் வில்லிசை குழுவினரின் "திருநீலகண்டர் வரலாறு" என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு தேர்த்திருவிழா உபயகாரரான திரு. பரமநாதன் குகதாசன் அவர்கள் அனுசரணை வழங்கியிருந்தார். மேலும், ஆலய பரிபாலனசபையால் நடத்தப்பட்ட சைவசமய அறிவு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்பட்டது.

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் மஹோற்சவத்தின்போது முதலாம் திருவிழா முதல் சப்பறத்திருவிழா வரையாக பதின்மூன்று நாட்களுக்கு தினமும் மாலை 05.30 மணிமுதல் 06.00 மணிவரை சொற்பொழிவும், 06.00 மணிமுதல் 06.15 மணிவரை கூட்டுப்பிரார்த்தனையும் (பஜனை) நடத்தப்பட்டது. மேலும், தரம் 03 முதல் தரம் 11 வரையுள்ள மாணவர்களுக்கிடையில் நான்கு பிரிவுகளாக கேள்விக்கொத்துகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு அவற்றிலிருந்து சைவசமய அறிவு போட்டியும் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. இவ் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்ற தின அன்னதான உபயகாரர்களாகிய இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவத்தின்போது முதலாம் திருவிழா முதல் சப்பறத்திருவிழா வரையாக ஒன்பது நாட்களுக்கு தினமும் மாலை 05.45 மணிமுதல் 06.00 மணிவரை கூட்டுப்பிரார்த்தனையும் (பஜனை) இரவு 09.00 மணிமுதல் 09.30 மணிவரை விநாயகர் புராணம் என்னும் தலைப்பில் சிவநெறிச்செம்மல். இளம் சைவப்புலவர். ச. நவநீதன் அவர்களின் தொடர் சொற்பொழிவும் தேர்த்திருவிழாவன்று அரியாலையூர் கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவ மாணவிகளின் இசைக்கச்சேரியும் நடைபெற்றது. மேலும், தரம் 03 முதல் தரம் 11 வரையுள்ள மாணவர்களுக்கிடையில் நான்கு பிரிவுகளாக கேள்விக்கொத்துகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு அவற்றிலிருந்து சைவசமய அறிவு போட்டியும் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. இவ் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் நோர்வே வாழ் சித்திவிநாயக அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

**நவராத்திரி விழா**

நவராத்திரியை முன்னிட்டு தரம் 03 முதல் தரம் 11 வரையுள்ள மாணவர்களுக்கிடையில் நான்கு பிரிவுகளாக மாலை கட்டுதல், கோலம் போடுதல், பண்ணிசை போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும், பண்ணிசைப்போட்டிக்கான பயிற்சியும், வழிகாட்டலும் நடத்தப்பட்டது. நவராத்திரி விழாவானது கடந்த 06.10.2019ஆம் திகதி மாலை 06.30 மணிமுதல் அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் கல்யாண மண்டபத்தில் அரியாலையூர் அறிநெறி பாடசாலை மாணவர்கள் அனைவரினதும் கலை நிகழ்ச்சிகள் உள்ளடக்கிய பிரமாண்டமான விழாவாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நவராத்திரி கால போட்டிகள், நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் அமரர். கோவிந்தபிள்ளை கந்தையா (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) ஞாபகார்த்தமாக அன்னாரின் பேரன் திரு. சீவரத்தினம் ஜீவேந்திரா (இங்கிலாந்து) அவர்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

**புத்தக வெளியீடு**

ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம், ஸ்ரீ மகாலட்சுமி அர்ச்சனை, சரஸ்வதி துதி, ஸ்ரீ குமரகுருபர அடியார்கள் அருளிய சகலகலாவல்லி மாலை பாடலும் பொழிப்பும் உள்ளடங்கிய "நவராத்திரி மாலை" என்னும் புத்தகம் வெளியிடப்பட்டது. இப்புத்தக வெளியீட்டிற்கு செல்வி. லக்ஷியா தியாகசீலன் (இங்கிலாந்து), செல்வன். லக்ஷன் தியாகசீலன் (இங்கிலாந்து) ஆகியோர் அனுசரணை வழங்கியிருந்தனர்.



Scanned with CamScanner

**தைப்பொங்கல் விழா**

தைப்பொங்கல் தினத்தன்று காலை எமது மன்றத்தில் பொங்கல் பொங்கி தைப்பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இப்பொங்கல் நிகழ்விற்கு எமது இளைஞர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள். அன்றையதினம் திருவெம்பாவை நாட்களில் அதிகாலையில் திருப்பள்ளியெழுர்ச்சி பாடலை ஓதிய ஐந்து (05) சிறுவர்களுக்கும், அவர்களை வழிநடத்திச்சென்ற திரு. அ. பரமராஜா அவர்களையும் ஊக்குவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. இவ் ஊக்குவிப்பு பரிசுகளை வழங்குவதற்காக திரு. பாலசுந்தரம் சங்கரன் அவர்கள். பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

**சிவராத்திரி (திருக்கேதீஸ்வர ஆலய தரிசனம்)**

சிவராத்திரியை முன்னிட்டு 21.02.2019ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று இரவு மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு அரியாலையூர் முப்பத்தைந்து (35) சிவனடியவர்களை பேருந்தில் அழைத்துச்சென்று மீண்டும் அழைத்துவரப்பட்டனர். இவ் ஆலய தரிசன சிவத்தொண்டிற்கு திரு. நடராஜா நேதாஜி (நோர்வே) அவர்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்.

**மன்றத்தின் எதிர்கால செயற்திட்டங்கள்.**

- அறநெறி பாடசாலைகளை ஊக்குவித்தல்.
- தீட்சை வழங்கும் நிகழ்வு ஆரம்பித்தல்.
- கூட்டுப்பிரார்த்தனை குழு (பஜனைக்குழு) அமைத்தல்.
- நிதி நிலைமையையும், அலுவலகத்தை மேம்படுத்துதல்.
- பக்கவாத்திய இசைக்கருவிகளை வாசிக்க பழக்குதல்.
- திருவாசகர் விழா நடத்துதல்.

**நன்றிகள்.**

- எமது மன்றத்தின் செயற்பாடுகளில் பங்குகொள்ளும் அனைத்து அரியாலையூர் இளைஞர்கள்.
- எமது மன்றத்திற்கு அனுசரணை வழங்கிய அனைத்து அனுசரணையாளர்கள்.
- சமய நிகழ்ச்சிகளை நடத்த அனுமதித்த கோவில்கள்.
- அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

நன்றி.

Dr. ம. அருங்கரன்
தலைவர்.

திரு. ஜெ. ஜசிந்தன்.
கௌரவ செயலாளர்.

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
அரன் நாமமே சூழ்க



Scanned with CamScanner

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

## 01.04.2019 முதல் 31.03.2020 வரையான கணக்கறிக்கை.

| பெறுவனவு | | கொடுப்பனவு | |
|---|---|---|---|
| விபரம் | தொகை | விபரம் | தொகை |
| அங்கத்துவம் | 2,500.00 | கைப்பொறுப்பு | 1,487.00 |
| அன்பளிப்பு | 283,421.00 | கற்பகவிநாயகர் திருவிழா நிகழ்ச்சி | 23,440.00 |
| | | பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் திருவிழா நிகழ்ச்சி | 23,987.00 |
| | | சித்திவிநாயகர் திருவிழா நிகழ்ச்சி | 30,240.00 |
| | | யோகா வகுப்பு கொடுப்பனவு | 22,720.00 |
| | | நவராத்திரி விழா | 73,005.00 |
| | | அலுவலக பராமரிப்பு | 1,740.00 |
| | | மின் இணைப்பு | 40,245.00 |
| | | தைப்பொங்கல் | 1,595.00 |
| | | சிவராத்திரி யாத்திரை | 19,170.00 |
| | | திருப்பள்ளி எழுச்சி பரிசு | 12,375.00 |
| | | காகிதாகி பொதுவானவை | 2,465.00 |
| | | **கையிருப்பு** | **33,452.00** |
| | **285,921.00** | | **285,921.00** |

T. Branavarav.

Dr. ம. அருங்கரன்.
தலைவர்.

திரு. த. பிரணவராவ்.
பொருளாளர்.

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
அரன் நாமமே சூழ்க

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

## 01.04.2019 முதல் 31.03.2020 வரையான கணக்காய்வு அறிக்கை.

எனக்கு தரப்பட்ட பற்றுசீட்டு புத்தகங்கள் இல 1, 2 செலவு உறுதிசீட்டுகள் காசு பதிவேடு என்பன என்னால் பரிசீலிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் அங்கத்துவ பணமாக ரூபா. 2,500.00 வும், பொது அன்பளிப்பாக ரூபா. 283,421.00 வும், காணப்பட்டது. மேலும், செலவு சீட்டுக்கள் 1-70 வரை மொத்த செலவாக ரூபா. 250,982.00 வும் காணப்பட்டது. 01.04.2020இல் பொருளாளர் கையிருப்பாக ரூபா. 33,452.00 உள்ளது.

மேற்படி கணக்குகள் சரியாக பராமரிக்கபட்டுள்ளது என அபிப்பிராயப்படுகின்றேன்.

திரு. வி. சச்சிதானந்தன்.
கௌரவ கணக்காய்வாளர்.

Scanned with CamScanner

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

## 01.04.2019 முதல் 31.03.2020 வரையான பெறுவனவு விபரம்

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **அன்பளிப்பு** | | |
| நடராஜா நேதாஜி<br>(யோகா வகுப்பு 2018-2019) | 25,000.00 | |
| நோர்வே வாழ் சித்திவிநாயகர் அடியார்கள்<br>(சிவன் கோவில் திருவிழா நிகழ்ச்சி 2018-2019) | 33,376.00 | |
| அரியாலை இந்து இளைஞர் | 600.00 | |
| பரமநாதன் குகதாசன்<br>(கற்பகவிநாயகர் திருவிழா நிகழ்ச்சி) | 22,000.00 | |
| தம்பிமுத்து சீவரத்தினம் | 1,000.00 | |
| புவனேஸ்வரி சரவணமுத்து<br>(யோகா வகுப்பு) | 24,000.00 | |
| மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்ற தின அன்னதான உபயகாரர்களாகிய இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள்<br>(மகாமாரி அம்மன் திருவிழா நிகழ்ச்சி) | 25,000.00 | |
| நோர்வே வாழ் சித்தி விநாயகர் அடியார்கள்<br>(சித்திவிநாயகர் திருவிழா நிகழ்ச்சி) | 35,000.00 | |
| முத்தையா ஜதிந்திரா | 5,000.00 | |
| லக்ஷயா தியாகசீலன், லக்ஷன் தியாகசீலன்<br>(நவராத்திரி மாலை) | 16,000.00 | |
| ஜெகன்மோகன் குமாரி | 5,000.00 | |
| சீவரத்தினம் ஜீவேந்திரா<br>(கொலுமேடை, நவராத்திரி விழா) | 51,000.00 | |
| பாலசுந்தரம் சங்கரன்<br>(திருப்பள்ளி எழுச்சி ஊக்குவிப்பு பரிசு) | 20,000.00 | |
| ப. பிரதீபன் | 445.00 | |
| நடராஜா நேதாஜி<br>(சிவராத்திரி யாத்திரை) | 20,000.00 | 283,421.00 |
| **அங்கத்துவம்** | | |
| தம்பிமுத்து சீவரத்தினம் | 1,000.00 | |
| சோமசுந்தரம் ரவிச்சந்திரன் | 500.00 | |
| ப.பிரதீபன் | 500.00 | |
| பரமநாதன் கரன்ஜித் | 500.00 | 2,500.00 |
| **மொத்த பெறுவனவு** | | 285,921.00 |

Dr. ம. அருங்கரன்.
தலைவர்.

T. Branavarao.
திரு. த. பிரணவராவ்.
பொருளாளர்.

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
அரன் நாமமே சூழ்க

Scanned with CamScanner

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

## 01.04.2019 முதல் 31.03.2020 வரையான கொடுப்பனவு விபரம்

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **01. கற்பகவிநாயகர் திருவிழா நிகழ்ச்சி** | | |
| விளம்பர பதாகை மற்றும் துண்டுபிரசுரம் | 240.00 | |
| பரிசு | 1,200.00 | |
| வில்லுப்பாட்டு | 22,000.00 | 23,440.00 |
| **02. மகாமாரி அம்மன் திருவிழா நிகழ்ச்சி** | | |
| விளம்பர பதாகை மற்றும் துண்டுபிரசுரம் | 1,200.00 | |
| பரீட்சை தாள் | 543.00 | |
| பரிசு | 9,944.00 | |
| சொற்பொழிவு | 12,000.00 | |
| உபசரணை | 300.00 | 23,987.00 |
| **03. சித்திவிநாயகர் திருவிழா நிகழ்ச்சி** | | |
| விளம்பர பதாகை மற்றும் துண்டுபிரசுரம் | 1,200.00 | |
| பரீட்சை தாள், கேள்விக்கொத்து | 2,150.00 | |
| பரிசு | 12,190.00 | |
| சொற்பொழிவு | 9,000.00 | |
| பொன்னாடை | 700.00 | |
| சங்கீத நிகழ்ச்சி | 5,000.00 | 30,240.00 |
| **04. யோகா வகுப்பு கொடுப்பனவு** | | |
| வேதனம் | 22,000.00 | |
| விளம்பர பதாகை | 720.00 | 22,720.00 |
| **05. நவராத்திரி விழா** | | |
| விளம்பர பதாகை மற்றும் அழைப்பிதழ் | 3,350.00 | |
| பரிசு | 12,390.00 | |
| உபசரணை | 11,395.00 | |
| நவராத்திரி மாலை | 16,000.00 | |
| கொலுமேடை | 11,300.00 | |
| ஒலி, ஒளி அமைப்பு | 4,000.00 | |
| நடுவர் கொடுப்பனவு | 2,000.00 | |
| பூசைப்பொருட்கள் | 5,270.00 | |
| நடன நிகழ்ச்சி | 6,000.00 | 73,005.00 |
| **06. அலுவலக பராமரிப்பு** | | 1,740.00 |
| **07. மின் இணைப்பு** | | |
| மின்சார சபை கட்டணம் | 21,500.00 | |
| ஆழிகள் பொருத்திய செலவு | 11,605.00 | |
| நீர் விநியோக செலவு | 7,140.00 | 40,245.00 |
| **08. தைப்பொங்கல்** | | 1,595.00 |
| **09. சிவராத்திரி யாத்திரை** | | 19,170.00 |
| **10. திருப்பள்ளி எழுச்சி பரிசு** | | 12,375.00 |
| **11. காகிதாதி பொதுவானவை** | | 2,465.00 |
| **மொத்த கொடுப்பனவு** | | **250,982.00** |

..................................
Dr. ம. அருங்கரன்.
தலைவர்.

T. Branavarau.
..................................
திரு. த. பிரணவராவ்.
பொருளாளர்.

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
அரன் நாமமே சூழ்க

Scanned with CamScanner